**நவகத்தேகம பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நவகத்தேகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதான பேரேட்டின் ஒரு கணக்கு வீதம் 03 நடைமுறை கணக்குகளின் தகவல்கள் பேணப்பட்டிருந்ததுடன், பரீட்சை மீதியினை தயாரிக்கும் போது சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையான்மை கணக்கு மீதிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய வருமானங்களாக கணக்கு வைக்க வேண்டிய ரூபா 7,425 கூட்டுத்தொகையான பயன்பாட்டு சேவைக்கான கட்டணங்கள் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(இ) ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 37,680 பெறுமதியான 112 வாசிகசாலை புத்தகங்கள் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 15,500 பெறுமதியான கணனி இயந்திரமொன்று மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 14 கணனி உதிரிப்பாகங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இறுதி இருப்பின் பெறுமதி முறையே ரூபா 458 கூடுதலாகவும், ரூபா 28,973 குறைத்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்றின் காலப்பகுதிக்குரிய சொத்துக்களை சுவீகரித்தல் ரூபா 29,808,658 ஆக காண்பிக்கப்பட்டுள்ள போதிலும், ஐந்தொகையின் காலப்பகுதிக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 31,048,613 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,239,955 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் சொத்துக்களை அகற்றல் திரண்ட நிதியக் கணக்கிற்கு கணக்கு வைக்கப்பட்டு, முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்களின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது.

(ஏ) காசுப்பாய்ச்சல்கூற்றில் கடன்பட்டோர் ரூபா 471,979 இனால் குறைவடைந்தமை மற்றும் ரூபா 194,897 தொகையான சொத்துக்களின் அகற்றுதல் சேர்த்தல்களாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்கு கிடைத்திருந்த க்ரூ கெப் வண்டி, மோட்டர் கிரேடர் மற்றும் பெக்கோ லோடர் ஆகியவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) ரூபா 1,550,000 பெறுமதியான NW - RD 1652 இலக்கம் கொண்ட உழவு இயந்திரம் மற்றும் NW - RW 8875 இலக்கம் கொண்ட டிரயிலர் ஆகியவற்றின் பெறுமதியினை மதிப்பிட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அதற்கு பதிலாக அவற்றை கையேற்பதற்கு செலவிடப்பட்டுள்ள ரூபா 35,000 தொகை சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) கையிருப்பிலுள்ள மீதிக்கு உரிய ரூபா 5,570 கூட்டுத்தொகையினை கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) ரூபா 4,750 தொகையான தீயணைக்கும் இயந்திரம் மற்றும் ரூபா 6,000 பெறுமதியான கணனி அச்சீட்டு இயந்திரம் ஆகியன நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 5,858,783 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 5,893,947 ஆனமையால் ரூபா 35,164 ஆன வேறுபாடொன்று நிலவியது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,997,185 ஆக இருந்ததுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,746,743 ஆக இருந்ததுடன், அவற்றுள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,427,777 ஆக இருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட செலுத்த வேண்டிய மிதிகளின் பெறுமதி ரூபா 243,629 ஆகும்.

(ஆ) பல வருடங்களாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த ரூபா 243,629 தொகையான அரசிறை தொடர்பில் பேதியளவிலான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அதனை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,881,442 மீதியினுள், 2014 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 07 கைத்தொழில்களுக்குரிய ரூபா 709,186 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அந்த அளவினால் அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்களாக அந்த பட்டோலைகள் தயாரிக்கப்பட்டு கணிப்பிடப்படாமல் 2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 30,000 தொகை மற்றும் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 80,000 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 05 கைத்தொழில்களுக்காக ரூபா 436,000 தொகையும், 2015 ஆம் ஆண்டில் ஒரு கைத்தொழிலுக்காக ரூபா 40,000 எனுமாறு ரூபா 476,000 கூட்டுத்தொகையில் செலுத்தப்பட்ட 20 சதவீதமான முற்பணத்தை நிதியேற்பாடுகள் கிடைக்காமையால் தீர்ப்பதற்கு முடியாது போயிருந்தது.

(உ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,915,412 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் ரூபா 1,728,860 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீசீலனை செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

----------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 (2) (அ) மற்றும் (ஈ) பிரிவுகளின் பிரகாரம் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம், முத்திரை கட்டணங்கள் மற்றும் குத்தகை வாடகை ஆகியவற்றை முறைப்படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1998 இன் பிரதேச சபை விதி (நிதி மற்றும் நிரவாகம்) 217 இன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,393,978 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,215,036 ஆக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

### செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் உரிய விலகல்களுடன் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | விலகல் |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | |
| ஆளணி வேதனங்கள் | 22,978 | 23,267 | (289) |
| ஏனையவை | 6,236 | 6,758 | (522) |
| உப கூட்டுத்தொகை | 29,214 | 30,025 | (811) |
| மூலதன செலவினம் | 2,088 | 7,554 | (5,466) |
| **மொத்தம்** | **31,302** | **37,579** | **(6,277)** |

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மூலதன செலவினம் மற்றும் உள்ளபடியான மூலதன செலவினம் ஆகியவற்றுக்கு இடையிலான விலகல் 72 சதவீதமாகும்.

## 2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டின் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் ஆகியவற்றிற்கிடையேயான விகிதம் 1.08 : 0.93 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அது 1.6 : 0.6 ஆகும். அது நியம விகிதம் 2:1 ஆக இருக்க வேண்டும்.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வருமானம் சேகரித்தலினான செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும்<br>குத்தகை மற்றும் வாடகை | 1,733 | 2,515 | (782) |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 141 | 154 | (13) |
| தண்டப்பணம் மற்றும் பிடியாணை | 2,740 | 851 | 1,889 |
| ஏனைய | 26,688 | 2,595 | 24,093 |
| | **31,302** | **6,115** | **25,187** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடந்த வருடத்தின் வருமானங்களை அறவிடல் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 30 சதவீதமாக இருந்ததுடன், அது மீளாய்வாண்டில் 19 சதவீத பெறுமானத்தை கொண்டிருந்தமையால் 11 சதவீத பின்னடைவிற்கு உட்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டையும் மீளாய்வாண்டையும் ஒப்பிடும் போது, திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் ஆகியவற்றுக்கிடையே 69 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டது. அதன் பிரகாரம், மிகை மதிப்பீடொன்று இடம்பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் சபையினால் நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானங்களை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.

| வருமானத் தலைப்பு | 2015.01.01 இல் நிலுவை வருமானம் | நிலுவையிலான அறவீடு | வருடத்தினுள் பட்டியலிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானத்திலான அறவீடு | 2015.12.31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| குத்தகை வாடகை | 03 | 03 | 998 | 1,137 | (139) |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | - | 80 | 101 | (21) |
| பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் | 388 | 388 | 851 | 507 | 332 |
| ஏனைய வருமானங்கள் | 131 | 21 | 90 | - | 200 |

மேற்படி தகவல்களின் மீளாய்வாண்டின் பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பணங்களின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமானம் ரூபா 344,00 ஆக இருந்த போதிலும், சபையானது ரூபா 332,000 தொகையினையே நிலுவையாக கணக்கு வைத்திருந்தமையால் ரூபா 12,000 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**2.4.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீதிமன்ற தண்டப்பணம்

மீளாய்வாண்டின் யூன் முதல் திசெம்பர் வரை ரூபா 509,831 கூட்டுத்தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களை வரவழைத்துக்கொள்ள சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 2015 ஆம் ஆண்டின் யூன் முதல் செப்தம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு உரிய ரூபா 281,998 தொகை மாத்திரம் கடன்பட்டோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக ரூபா 50,000 தொகையான மதிப்பிடப்பட்ட தொகையினை மாத்திரம் அதற்கு பதிலாக கணக்கு வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) முத்திரைக் கட்டணம்

பெற வேண்டிய முத்திரைக் கட்டண பட்டியல்களை தயாரிக்காமையால் 2013 யூன் மாதம் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ரூபா 200,000 தொகையான மதிப்பிடப்பட்ட தொகையினை கணக்கு வைப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

சபையினால் போதியளவிலான வருமான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவோ புதிய வருமானமீட்டும் வழிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவோ இல்லை.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், ரூபா 2,804 பெறுமதியான 20 புத்தகங்கள் தொலைந்து போயுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன், அந்த நட்டத்தை அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 வருடங்களுக்கு முன்னர் ரூபா 3,745 பெறுமதியான 18 புத்தகங்கள் இரவலாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை மீள பெற்றுக்கொள்வதற்கோ அல்லது அதன் நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 1,180,660 கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டில் செப்பனிடுவதற்காக கையளிக்கப்பட்டிருந்த 03 வீதிகள் ஆண்டின் இறுதி வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் ஒரு வீதிக்காக 20 சதவீத தொழிலாரம்பிப்பு முற்பணமாக ரூபா 120,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை அறவிடுவதற்கு அதன் செய்வேலை போதுமானதாக இருக்கவில்லை. எனைய இரு வீதிகளினதும் செயன்முன்னேற்றம் முறையே 45 சதவீதம் மற்றும் 40 சதவீதம் ஆகும்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மூலதன நிதியேற்பாடு ரூபா 2,088,250 ஆக இருந்ததுடன், உள்ளபடியான மூலதன செலவினம் ரூபா 7,554,076 ஆனமையால் அதன் விலகல் 362 சதவீதமான பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

சபை உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்றினை தயாரித்திருந்த போதிலும், 2015 யூலை 01 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 அந் திகதி வரை உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

சபை 2014 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை தாபித்திருந்ததுடன், காலாண்டிற்கு ஒரு தடவையேனும் இந்த குழு கூட்டப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருடங்களாக சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக நிலவியதுடன், அந்த பதவியின் பதிற் கடமை அபிவிருத்தி உத்தியோகத்தரால் (வருமான மேம்படுத்தல்) மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நூலக அதிபர், வேலை மேற்பார்வையாளர், குழாய் கிணறு மற்றும் மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகிய பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாக நிலவியமையால், பிரதேச சபையினால் பிரதேசத்திற்கு ஆற்றப்படும் சேவை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் முறைப்படி நிகழவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான ரூபா 332,500 பெறுமதியான சிறிய குபோடா உழவு இயந்திரம் மற்றும் அதன் டிரெயிலர் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயலற்றிருந்தது.

(ஆ) வருடாந்த மெய்மையாய்வு

ரூபா 16,380,000 பெறுமதியான WP - 2A - 5050 இலக்கம் கொண்ட பெக்கோ லேடர் மற்றும் ரூபா 18,000,000 பெறுமதியான 2A - 5289 இலக்கம் கொண்ட மோட்டர் கிரேடர் ஆகியவை 2016 மே 17 ஆந் திகதி வரையிலும் சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்